<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.II, Mettur**</u>

**Case No : C.C. 180/2025**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 10.11.2025.**

| | |
|---|---|
| **Name : ராஜாமணி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

<u>**முதல் விசாரணை**</u>

1) நான் சந்திரமாகடைக்கு அருகே குடியிருந்து வருகிறேன். அ.சா.1 என் கணவர் ஆவார். சம்பவம் நடந்த போது நான் சேலத்தில் வாஷிங் மிஷன் வாங்குவதற்காக சென்று வீடு திரும்பிய போது என் கணவரை எதிரி காவேரி அடித்துக் கொண்டிருந்தார். இது பற்றி என் கணவரிடம் கேட்ட போது என்னை எதிரி காவேரி முதுகின் மீது குச்சியால் அடித்தார். எதிரியின் மனைவி என் தாலி கொடியை பிடித்து வளைத்து அடித்தார். என் கணவர் சண்டையை விலக்கிவிட்டார். எதிரிகள் எங்கள் வீட்டிற்குள் வந்து தான் அடித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—</u>

2) எதிரி காவேரி என் கொழுந்தனார் என்றால் சரிதான். எதிரி காவேரி என் வீட்டிற்கு வந்து என் கணவரை பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டினார் என்றும், எதற்காக திட்டுகிறீர் என்று கேட்ட போது எதிரி காவேரி இரும்பு சேரை

எடுத்து என் கணவரின் நடு மண்டையில் அடித்தார் என்றால் சரிதான். கட்டையை எடுத்து என் கணவரின் வலது கை மீது அடித்தார் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் ஆமாம். நான் சண்டையை விலக்க சென்ற போது தான் கவிதா தாலியை இழுத்து என் முதுகின் மீது காலால் எட்டி உதைத்தார் என்றால் ஆமாம்.

3) எதிரி காவரேி தான் கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் ஆமாம். தற்போது அரசு தரப்பில் சாட்சியம் அளித்தவாறு தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.14 11:40:09 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 180/2025**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 10.11.2025.**

| | |
|---|---|
| **Name : அசோக்குமார்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சென்னையில் குடியிருந்து பொறியாளராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1, 2 இருவரும் பெற்றோர்கள். சம்பவம் நடைபெற்ற சமயம் தீபாவளி என்பதால் நான் மற்றும் என் மனைவி சுதாவும் தீபாவளி பண்டிகைக்காக 14.11.2023 ம் தேதி சேலம் சென்றோம். அப்போது என் அப்பா வீட்டில் தனியாக இருந்தார். காவேரி என்பவர் கயிறு எடுத்து என் அப்பாவின் கழுத்தில் போட்டு கீழே தள்ளிவிட்டார். அதன் பிறகு நாங்கள் சேலத்திலிருந்த வந்த பிறகு காவேரி அவரை அடித்ததாக சொன்னார்.

2) நான் காவேரியை அழைத்து எதற்காக அடித்தீர் என்று கேட்டதற்கு காவேரி, கவிதா, அவர்களது மகள் மூவரும் வீடு ஏறி வந்து என் அம்மாவை அடித்தார்கள். அம்மாவை அடித்த போது என் அப்பா தடுத்த போது கவிதாவும், அம்மாவும் கீழே விழுந்தார்கள். கவிதா என் அம்மாவின் தாலி செயினை பிடித்த போது என் அப்பா விலக்கிவிட்டார். அப்போ பின்னால் வந்த காவேரி என் அப்பாவின் கழுத்தில் அடித்தார்.

3) அந்த சமயம் என் அம்மாவும், கவிதாவும் ஒருவரையொருவர் பிடித்த

போது என் அப்பா விலக்கிவிட்டார். காவேரி என் அப்பாவின் கன்னத்தில் அறைந்தார். அதன் பிறகு காவேரி என் அம்மா ராஜாமணியின் முதுகில் குத்தினார். என் அப்பா அதனை விலக்கிவிட்டார். காவேரியும், கவிதா, அம்மாவும் எழுந்து சென்றனர். அதன் பின்னர் என் அப்பா வலது பக்கம் சென்றார். அவர்களும் எதிர்திசையில் சென்றார்கள். கவிதா மீண்டும் என் அப்பாவை அடிக்க வந்தார். காவேரி கீழே இருந்த இரும்பு சேரை எடுத்து என் அப்பாவின் பின் பக்கம் அடித்தார். 2 வது தடவை இரும்பு சேரால் காவேரி என் அப்பாவின் தலையில் அடித்தார்.

4) அதன் பின்னர் நான் பயந்து போய் வீட்டிற்கு பின்னால் சென்றேன். நான் போய் தடுத்திருந்தால் என் மீதும் அடி விழுந்திருக்கும். அதனால் நான் பயந்து போய் பின்னால் சென்றேன். அதன் பிறகும் அவர் போகவில்லை. தடியை எடுத்துக் கொண்டு என்னை அடிக்க வந்தார். அப்போது என் அப்பா என் மீது அடி விழுவதை தடுக்க வந்ததால் என் அப்பாவின் மீது விழுந்தது. நான் மீண்டும் பயத்தில் சற்று பின்னால் சென்றேன். துடப்பதை என் மீது தூக்கி எறிந்தார். அனைத்தும் நடந்தது குறித்து வீடியோ ஆதாரமாக உள்ளது. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை – இல்லை**</u>

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.14 11:40:15 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 180/2025**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 10.11.2025.**

| | |
|---|---|
| **Name : சுதா** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சென்னையில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1, 2 இருவரும் என் மாமனார், மாமியார் ஆவார். சம்பவம் நடைபெற்ற சமயம் தீபாவளி என்பதால் நான் மற்றும் என் கணவர் அசோக்குமார் தீபாவளி பண்டிகைக்காக 14.11.2023 ம் தேதி சேலம் சென்றோம். அன்று மாலை 5.30 மணியளவில் நாங்கள் வீட்டிற்கு வந்த போது அ.சா.1 எங்களிடம் காவேரி என்பவர் அ.சா.1 மாமனாரின் கழுத்தில் கயிற்றை போட்டு இறுக்கியதாக சொன்னார்.

2) ஏன் இவ்வாறு இழுத்தாய் என்று காவேரியிடம் கேட்டோம். அதற்கு காவேரி உன் பேரன் தடத்தில் அசிங்கம் செய்துவிட்டார் ஏன் அவ்வாறு செய்தார் என்று கேட்டு திட்டினார். என் மாமனார் கேட்பதற்குள் காவேரி கெட்ட வார்த்தையால் திட்டினார். எதிரி கவிதா என் மாமியார் அணிந்திருந்த தாலி செயினை பிடித்து இழுத்து கீழே தள்ளினார். இதை என் மாமனார் தடுக்க சென்ற போது காவேரி இரும்பு சேரால் அ.சா.1 ன் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். வலது கையிலும் இரும்பு சேரால் அடித்தார்.

3) அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வந்து சண்டையை தடுத்தார்கள். ஆஜர் எதிரிகள் தான் அ.சா.1, 2 யை அடித்தவர்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை **– இல்லை**

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.14 11:40:21 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 180/2025**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 10.11.2025.**

| | |
|---|---|
| **Name : தமிழரசன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பாராகல்லூரில் குடியிருந்து கார் ஓட்டுநராக வேலை செய்கிறேன். அ.சா.1, அ.சா.3 ஆகியோரை எனக்கு தெரியும். எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகள் அ.சா.1யை அடித்ததாக சொன்னார்கள். கடந்த 14.11.2023ம் தேதி மாலை 7 மணிக்கு மேச்சேரி போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதில் நான் மற்றும் என் மனைவி மோகனா இருவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2) சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். நான் மகஜரில் காவல் நிலையம் வந்து கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை. சம்பவயிடத்தில் செய்தேன். நான் 4 தாள்களில் கையொப்பம் செய்தேனா என்றால் 1 தாளில் தான் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால்

தெரியும். இந்த வழக்கின் எண் மற்றும் பிரிவு எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு படித்து காண்பித்தார்கள். நான் கையொப்பம் செய்தேன். வழக்கு எண் மற்றும் பிரிவு இருந்ததா என்றால் இருந்தது. அ.சா.1 என்ன உறவு என்றால் என் மனைவியின் சித்தப்பா ஆவார். சம்பவயிடத்திற்கும் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் இரண்டு காடுகள் தள்ளி. நான் சொல்வது போல் சொல்லும் நேரத்தில் சம்பவயிடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றும் அ.சா.1 என் உறவினர் என்பதால் காவல் நிதலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது அ.சா.1 கேட்டுக் கொண்டதால் சம்பவயிடத்தில் கையொப்பம் செய்ததாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.14 11:40:26 +0530

Judicial Magistrate No.II,
Mettur.